★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 26உ வெள்ளி (9—3—56) ★ ★ வெளியூர்: மாசி 27உ சனி (10—3—56) [இதழ் 228

'அழிவைத் தரும் வெறும் வயிறு'!

'அணு குண்டைவிட பெரும் அழிவைத் தரக்கூடியது வெறும் வயிறு ஆகும்' என்று ஜாம்நகர் ஜாம் சாகிப், கதர்—கிராமத் தொழில் நிறுவனத்தைத் திறந்துவைத்தபோழுது குறிப்பிட்டார்.

கிராமத் தொழில்கள், கிராமப் பகுதிகளில் இருந்துவரும் வேலையின்மையை விரட்டக்கூடியதாக இருக்க வேண்டும் என்று அபிவிருத்தி அமைச்சர் அப்பொழுது கூறினர்.

வட நாடு வளரும் வகை

ரூ. 110 கோடி செலவில் புதிய உருக்குத் தொழிற்சாலை

செலவில் பாதி ரஷ்யாவும் பாதி இந்தியாவும் ஏற்கின்றன

ரஷ்ய நிபுணர்கள் திட்டத்திற்கு அங்கீகாரம்

புதுடில்லி, மார்ச். 8—

ரூ. 110 கோடி செலவில் ஒரு பெரும் உருக்குத் தொழிற்சாலை ரஷ்யாவின் உதவியுடன் மத்தியப் பிரதேசத்தில் பிலாய் எனுமிடத்தில் அமைப்பது என்ற ரஷ்ய நிபுணர்களின் திட்டத்தை டெல்லி சர்க்கார் ஏற்றுக்கொண்டு விட்டனர்.

துவக்கத்தில், ஆண்டொன்றுக்கு 13 இலட்சம் டன் உருக்குப்பொருள் உற்பத்தி செய்யும் இந்தத் தொழிற்சாலை நாளாவட்டத்தில் 25 இலட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடியதாக விரிவாக்கப்படுமாம்.

தொழிற்சாலை நிர்மாணிப்பதற்காகும் செலவில் பாதியை, ரஷ்யா வழங்கவிருக்கிறது.

கடந்த டிசம்பர் திங்களில் ரஷ்ய நிபுணர்கள் தொழிற்சாலை அமைப்பது பற்றிய தங்கள் விசாரணை அறிக்கையைத் தந்திருந்தனர். டில்லி அதனைப் பரிசீலித்துவிட்டு சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

தொழிற்சாலை அமைப்பது என்ற ஒப்பந்தம் இந்தியா—ரஷ்யா நாடுகளிடையே கடந்த ஆண்டு பிப்ரவரித் திங்களில் கையெழுத்தாயிற்று.

பிலாயிலிருந்து 60 மைல் தொலைவில், இன்னும் தோண்டப்படாதிருக்கும் டல்லி—ராஜ்ஹாரா பகுதியில் கிடைக்கும் இரும்புக் கனிகளை இந்தப் பிலாய் தொழிற்சாலை பயன்படுத்துமாம்.

தொழிற்சாலைக்குத் தேவையான நிலக்கரி, இப்போது விரிவாக்கப்பட்டு வரும் ஜாரியா, பொகாரோ, கோர்பா நிலக்கரிப் பிரதேசத்திலிருந்து பெறப்படுமாம். மின்சாரம், மத்திய பிரதேச மின்சார உற்பத்தி போர்டு அமைக்கும் தெர்மல் நிலையத்திலிருந்து பெறப்படுமாம்.

இந்தத் தொழிற்சாலை நிர்மாணத்திற்காகவும், இயக்கத்திற்காகவும் சுமார் 300 ரஷ்ய நிபுணர்கள் அமர்த்தப் படுவார்கள் என்றும் தெரிய வருகிறது.

நெய்வேலித் திட்டப் பரிசோதனைகள்

விளைவுகள் உற்சாகம் தருகின்றனவாம்

புதுடில்லி, மார்ச் 7—

நிமிடத்திற்கு 16,000 காலன்கள் தண்ணீரை நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து வெளியேற்றும் வேலைகள் பிப். 29-ந் தேதி முதல் நடைபெற்று வருவதாகவும், இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணிகளில் 'ஊக்கமூட்டுவதற்கான அறிகுறி'கள் தோன்றியிருப்பதாகவும், ராஜ்யங்கள் சபையில் துணை உற்பத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'ரூ. 40 கோடி மதிப்புக்கு 7000 ஏக்கர் நிலம் இந்தத் திட்டத்திற்காக வாங்குவதற்கு அனுமதி தரப்பட்டிருக்கிறதா?' என்ற கேள்விக்கு, 'இதுவரையில் ஏதும் அனுமதிக்கப்படவில்லை' என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

மதுவிலக்கு:

'உதவித் தொகை தரப்படுமானல் எங்களுக்கும் தரப்பட வேண்டும்'

டில்லிக்கு சென்னை கோரிக்கை

"மதுவிலக்கு அமுல் செய்வதற்காக, டில்லி சர்க்கார் மாநில சர்க்கார்களுக்குப் பண உதவி செய்யுமானல் சென்னைக்கும் அந்த உதவி தரவேண்டும்"

என்று, சென்னை சர்க்கார் டில்லிக்கு எழுதியிருக்கின்றனர்.

ஆந்திர சர்க்கார், மதுவகைகளைக் கட்டுப்படுத்தி, பங்கீடு முறை மூலம் விநியோகித்து, படிப்படியாக மதுவிலக்கை அமுல் செய்யலாம் என்று கருத்தறிவித்திருக்கின்றனராம்.

மதுவிலக்கு விசாரணைக் குழுவினர் 1958 ஏப்ரல் 1-ந் தேதிக்குள் இந்தியா முழுமையிலும் மதுவிலக்கு அமுலாக வேண்டுமெனச் செய்துள்ள சிபாரிசை பல மாநிலங்கள் ஏற்றுக்கொள்ள இயலாதெனத் தெரிவித்துள்ளனவாம்.

இந்தக் கால கெடு மிகவும் குறுகியது என்றும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கருதி இந்தக் கால கெடுவைத் தள்ளிப்போட வேண்டுமெனவும் பல மாநிலங்கள் கோரியுள்ளனவாம்

என்ருலும், எல்லா மாநிலங்களும் மதுவிலக்கை படிப்படியாக, அமுல் செய்வதை வரவேற்றன

குறிப்பிட்ட கால 'கெடு'க்குள் இந்தியா முழுமையிலும் மதுவிலக்கு அமுல் செய்யப்படுமானல் 120 கோடி ரூபாயை ஐந்தாண்டுத் திட்டம் இழக்க நேரிடும் என்றும் தெரியவருகிறது.

இந்தத் தகவல்களை டில்லி மக்கள் சபையில் உதவித் திட்ட மந்திரி மிஷ்ரா தெரிவித்திருக்கிருர்.

சம்யுக்த மராட்டிரம் அமைக்கப் போராட்டம்

லோகாமான்ய திலகர் பேரன் தலைமையில் முதல் அறப்போர் துவக்கம்

லோகமான்ய திலகரின் பேரனும், 'கேசரி' வார இதழின் ஆசிரியருமான ஜே. எஸ். திலக் தலைமையில், முதல் அறப்போர் பெரும் படை, சம்யுக்த மராட்டிரம் பெறுவதற்காக, அமைதியான நேரடி நடவடிக்கையை மேற்கொள்ளுகிறது.

அறப்போரை சம்யுக்த மாராட்டிர சங்கம் துவங்குகிறது.

காங்கிரஸ் நீங்கிய சகல அரசியல் கட்சியினரும், பம்பாய் உள்ளிட்ட மராத்தி மொழி வழங்கும் பிரதேசத்தைச் சேர்ந்த சுயேச்சை சட்டசபை உறுப்பினர்களும், மேற்படி அறப்போர் அணியில் பங்கு கொண்டு உள்ளனர். அறப்போரும் 'கட்டுப்படுத்தப்பட்ட நேரடி நடவடிக்கை'யாகவே இருக்குமெனத் தெரிகிறது.

திலகர் பேரன் தலைமையில் துவக்கப்படும் முதல் அறப்போர் பெல்காம் நகரில் நடைபெறுகிறது. அத்தகு நேரடி நடவடிக்கை மற்ற முக்கிய நகரங்களிலும் 16-ந் தேதி முதல் கொண்டு துவக்கப்பட இருக்கிறது.

பம்பாய் நகரில் மாகாண சீர்திருத்த மசோதா சட்டசபையில் விவாதிக்க எடுத்துக் கொள்ளப்படும் நாளன்று துவக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

நாகர்கோவிலில் காங்கிரஸ் படுதோல்வி

நாகர்கோவில் நகர சபைக்கு நடைபெற்ற தேர்தலில் தேசியக் காங்கிரஸ் மண்ணைக் கவ்வியிருக்கிறது.

மொத்தம் உள்ள 32 இடங்களில் 3 இடங்களில் மட்டுமே தேசியக் காங்கிரஸ் வெற்றி பெற்று, இதர இடங்களில் படு தோல்வி யடைந்திருக்கிறது.

திரு-தமிழகக் காங்கிரஸ் கட்சியினர் 16 இடங்களையும், கம்யூனிஸ்டுகள் 2 இடங்களையும், சுயேச்சைகள் 11 இடங்களையும் பெற்றுள்ளனர்.

கொள்கையளவில் ஏற்றுக் கொண்டனராம்!

புதுடில்லி, மார்ச் 9—

'யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' மூலம் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படாத சர்க்கார் வேலைகள் எல்லாவற்றிற்கும், வேலை தேடித் தரும் நிலையங்களின் மூலமாகவே ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று, சிவராவ் கமிட்டி தெரிவித்துள்ள சிபாரிசை இந்திய சர்க்கார் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று மத்திய தொழிலாளர் நல மந்திரி ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், மக்கள் சபையில் கூறினர்.

சர்க்கார் அலுவலகங்கள் எல்லாவற்றிற்கும், வேலையளிப்பு நிலையங்களின் மூலமாகவே ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கட்டாயத்தை யொட்டியும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இதர நடவடிக்கைகளை யொட்டியும், மேலும் பல வேலையளிப்பு நிலையங்களை ஏற்படுத்த வேண்டியிருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நிலையம் வீதம் ஏற்படுத்துவதென இலட்சியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், புதிதாக 125 நிலையங்களை ஏற்படுத்த ஏற்கெனவே ஏற்பாடு உள்ளது.

அர்த்தாலுக்குத் தொடர்பற்றதைக் கூற வேண்டுமாம்!

தாம் விரும்பியதைச் செய்யாதது கூட்டணித் தலைவரின் குற்றமாம்!

காமராசர் திருத்தம் செய்கிருர்

முதன் மந்திரி காமராசர், தான் லயோலா கல்லூரி மாணவர்களிடை பேசியது பற்றி பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும் செய்திகள்மீது ஒரு திருத்தம் வெளியிட்டிருக்கிருர்.

'பிப்ரவரி 20-ல் அர்த்தால் நடத்திய கூட்டணியினர், இந்தியாவிலிருந்து தமிழ் நாட்டைத் துண்டாடிவிட வேண்டுமெனக் கோருபவர்கள்' என்று நான் லயோலாக் கல்லூரியில் கடந்த 7-ந் தேதி பேசும்போது குறிப்பிட்டதாக பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது; இப்படி நான் சொல்லவில்லை. நான் குறிப்பிட்டதெல்லாம், 'கூட்டணியில், இந்தியாவிலிருந்து தமிழ் நாட்டைப் பிரிக்க வேண்டுமெனக் கோருபவர்களும் இருக்கிருர்கள்' என்றுதான்.

கூட்டணித் தலைவர், 'தமிழ் நாட்டைப் பிரிக்கவேண்டுமென்பதே கூட்டணியின் நோக்கம்' என்று கூறப்பட்ட குற்றச்சாட்டை மறுத்துரைத்திருக்கிருர்.

பிரிவினைச் சக்திகள் சிலவும், கூட்டணியில் இருக்கத்தான் செய்கின்றன என்பதை அவர் ஒப்புக்கொண்டிருந்தால், அதுதான் நியாயமானதாகவும், சரியானதாகவும் இருந்திருக்கும்; இதைத்தான் நான் லயோலா கல்லூரியில் குறிப்பிட்டேன்.

மராட்டியருக்கு பம்பாய் இல்லை என்பது இறுதி முடிவாகிவிட்டது?

மத்திய சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் வரும் பம்பாய் நகரம்; சௌராட்டிரா—கட்ச் இணைந்த குஜராத்; மராத்வாடா, விதர்ப்பம் இணைந்த மராட்டியம்—இவை மூன்று மாநிலங்களுக்கும் ஒரே கவர்னர், ஒரே உயர் நீதிமன்றம், ஒரே பொதுப்பணித் தேர்வுக் குழு என்று, மாநிலப் புது அமைப்பு மசோதா விதிப்பதாகக் கூறப்படுகிறது.

பம்பாய் நகரம் எந்த அடிப்படையில் மத்திய சர்க்காரின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் என்பதும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும், பின்னர் அது முடிவு செய்யப்படும் என்றும், பம்பாயில் உள்ள கர்நாடக மாநிலங்கள் கர்நாடகத்துடன் இணையும் என்றும் அந்த மசோதா கூறுகிறதாம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 9—3—56 வெள்ளி

பண்டிதரின் பணிவு!

தெலுங்கு மொழி வழங்கும் மூன்றரைக் கோடிக்குமதிகமான ஆந்திர மக்கள் அனைவரும் ஒரே மாநில எல்லைக்குள் வாழவேண்டும் என்ற அவர்களது நீண்டநாளைய ஆசையை நிறைவேற்றி வைக்க இந்தியப் பிரதமர் நேரு இணங்கிவிட்டிருக்கிறார். தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நேருவை இணங்க வைப்பதில்—பணிய வைப்பதில் ஆந்திர மக்கள் இருமுறை வெற்றிபெற்றிருக்கிறார்கள்.

'மொழிவழியாக மாநிலங்கள் அமையவேண்டும்' என்ற கொள்கையைப் பகிரங்கமாக ஒதுக்கி வைத்துவிட்டு, 'மொழிவழி மாநிலம் அமைப்போம்' என்று வழங்கிய உறுதி மொழிகளை விழுங்கிவிட்டு, புதிய தத்துவார்த்தம் பேசத் துவங்கிய அகில இந்தியக் காங்கிரசிற்குப் பொதுவாகவும், வடநாட்டு ஏகாதிபத்திய மூலவர்களுக்குக் குறிப்பாகவும் புத்தி புகட்டும் மொழிவழி ஆந்திர மாநில அமைப்பு என்ற மகத்தான சம்பவத்தைச் சிருஷ்டித்தவர்கள் என்ற போற்றுதலுக்குரியவர்கள், ஆந்திரர்கள்!

உள்நாட்டின் மிகப் பெரும் விவகாரங்களைக்கூட அலட்சியம் செய்துவிட்டு, விழிகளை உலகத்தைச் சுற்றிவருமாறு சுழற்றிக்கொண்டிருந்த பெரிய மனிதரின் மமதை நிறைந்த போக்கிற்குத் தரப்பட்ட பலமான அடிதான், 1953 அக்டோபர் திங்களில் பிறந்த ஆந்திர மாநிலம். ஆந்திர மாநில அமைப்பு, இந்தியாவெங்கணும் சற்று அயர்ந்திருந்த மொழிவழி மாநிலம் கோரி நின்றோரது உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பிற்று. இந்தியத் துணைக்கண்டத்தில், கடந்த சில ஆண்டுகளாக வீரஉலா வரும் மொழிவழி மாநில அமைப்பிற்கான நடவடிக்கைகள் அத்தனையும் ஆந்திர மாநில அமைப்பிலிருந்து உயிர்பெற்று இயக்கப்பட்டவைதான் என்பதில் மிகை அதிகம் இருக்கமுடியாது. தென்னாட்டில் மட்டுமின்றி வடநாட்டிலும் மொழிவழி மாநிலம் அமைய வேண்டுமென உளமாற விரும்புவோர், மொழிவழி மாநில அமைப்புப் போராட்டத்தில் முன்னோடிகளாக விளங்கும் நமது ஆந்திர சகோதரர்களுக்கு நன்றி செலுத்தவே செய்வர்.

மாநிலப் புதுஅமைப்புக் குழுவினர், ஐதராபாத் மாநிலத்தைத் துண்டாட வேண்டும் என்றும், துண்டாடப்படும் மராட்டிய, கன்னடப் பகுதிகள் அந்தந்த மாநிலங்களுடன் இணைய வேண்டுமென்றும் சிபாரிசு செய்திருந்தபோதிலும், அதில் உள்ள தெலுங்கு மொழி மாவட்டமான தெலிங்கானா ஆந்திரத்துடன் இணைய வேண்டுமென என்ன காரணத்தாலோ சிபாரிசு செய்யவில்லை. அதுகுறித்து ஐந்தாண்டுகள் கழித்து யோசிக்கலாம் என்று கூறியிருந்தனர்.

இதுபோன்று, குழுவினரின் மொழிவழி மாநில அமைப்பிற்கு விரோதமான சிபாரிசுகளுக்கெதிராக இந்தியாவெங்கும் கிளர்ச்சி எழுந்தது போலவே, ஆந்திர மக்களிடையேயும் எழுந்தது. தெலுங்கு பேசும் மக்கள் அனைவரும் ஒரு மாநில எல்லைக்குள் வாழவேண்டும என்ற நியாயத்தைப் புறக்கணிக்க பிரதமர் நேரு விரும்பவில்லை என்று கூறப்பட்டது, துவக்கத்தில்.

அவர் விரும்பவில்லை என்று கூறுவதைக்காட்டிலும், புறக்கணிக்கும் துணிவு பெற்றிருக்கவில்லை என்று கூறுவது சாலப் பொருத்தமுடையதாகும். முடிவை அறிவிக்காமல், மதில்மேல் பூனையாக சிலநாள் இருந்துவிட்டு, இப்போது, தெலிங்கானா ஆந்திரத்துடன் இணையும் என்று அறிவித்துவிட்டிருக்கிறார்.

முழுவதும் மொழிவழியாக மாநிலம் அமைத்துக்கொண்ட ஆந்திர மக்கள் பாராட்டுதலுக்குரியவர் என்பதில் ஐயமில்லை.

விசால ஆந்திரம் அமைவது பற்றி மகிழ்ச்சி தெரிவித்துப் பேசிய மாநில துணை முதன் மந்திரி, பெல்லாரி பற்றிக் குறிப்பிட்டு, அது தங்களுக்குத் தரப்படவேண்டும் என்று கோரி இருக்கிறார். இந்தக் கோரிக்கை என்ன பலனைப் பெறப்போகிறது என்பதைச் சற்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

விசால ஆந்திரம் குறித்து மகிழ்ச்சியுறும் ஆந்திர சகோதரர்கள், தங்கள் மாநிலத்தில் பெரும் பகுதியினராக வேறு மொழி பேசும் மக்களைக் கொண்ட பகுதிகளிருக்குமானல், அவற்றைத் தொடர்புடைய மொழி மாநிலங்களுடன் இணைத்துவிடச் சம்மதித்தாக வேண்டும் என்ற நியாயத்தையும் மறந்துவிடக் கூடாது. ஏனெனில், மொழிவழியாக விசால ஆந்திர மாநிலம் அமைய வேண்டும என்பதில் உள்ள நியாயம், எல்லா மக்களுக்கும் பொதுவானதாகும்.

அமைகிற விசால ஆந்திர மாநிலத்தின் இரண்டு பகுதிகளுக்கும் தனித்தனி மண்டல சபைகள் நிறுவப்படும் என்பதும், அந்த சபைகள் தங்கள் பகுதி மக்களின் நலன்களைக் கவனித்துக்கொள்ளும் என்பதும், பிரிந்திருந்தவர் கூடுவதற்கு முன் ஏற்பட்ட உணர்ச்சிகளை, கூடிவிட்ட பின் ஏற்படும் மகிழ்ச்சியில் மறந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் என்றால், யாரும் குறைபட்டுக்கொள்ளத் தேவை இல்லை.

விசால ஆந்திரம் அமைவதில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இரட்டை மகிழ்ச்சி. அந்த அமைப்பு, பண்டிதரின் பணிவுக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

புதுடில்லி, மார்ச் 5—
1955 டிசம்பர் மாதத்தில், புதிதாக மொத்தம் 92 தொழில் தகராறுகள் ஏற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது நிறுவனம்.

'திடீர் நகரைக் காலிசெய்யக்கூடாது'

'ஏழை மக்களைப் புறம்போக்கு நிலங்களிலிருந்து துரத்தக்கூடாது'

'நிலச் சீர்திருத்தம் செய்ய சர்க்கார் மிராசுதாரர்களுக்கு பயப்படுவானேன்?'

சட்டசபையில் கோவிந்தசாமி உரிமைக் குரல்

"மதுரை நகரில் வீடு இல்லாத தாழ்த்தப்பட்டோர்களும், ஏழைகளும் நகரின் ஒரு பகுதியில், 'திடீர் நகர்' என்ற ஒரு நகரை ஏற்படுத்தியுள்ளனர்; அந்நகரில் 7 ஏக்கர் 72 'செண்ட்' நிலத்தில் 450 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன; ஆனால் இப்பொழுது அந்த நகரைக் காலிசெய்ய வேண்டுமென்று மாவட்ட அதிகாரி திடீரென உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த நகரைத் திடீரென்று தாழ்த்தப்பட்டோர் காலி செய்ய வேண்டும் என்றால் அவர்கள் எங்கே போகமுடியும்? வசிக்க இடமில்லாதவர்கள் சென்னையில் எப்படி நடைபாதையில் வாழ்க்கை நடத்திக்கொண்டு கஷ்டப்படுகிறார்களோ அப்படிப்பட்ட நிலைமைதான் இந்த இடத்திலும் ஏற்படும். ஆகவே, இந்த மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மந்திரி அவர்களைச் சேர்ந்தது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்,"

—என்று, 5—3—56-ல் சென்னை சட்டசபையில் வரவு-செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"என் தொகுதியில் வெள்ளையம்பட்டு, முட்டத்தூர், தொரவி ஆகிய இடங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களில் தாழ்த்தப்பட்டோர்களும், ஏழைகளும் வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த நிலங்களைக் காலி செய்ய வேண்டுமென்று மாவட்ட அதிகாரி உத்தரவு போட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. பல ஆண்டுகளாக இங்கு இந்த ஏழை மக்கள் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள்.

அவர்கள் அங்கு வாழ்வதனால் போக்கு-வரத்து வசதிக்கு ஒன்றும் பாதகம் ஏற்படவில்லை. முட்டத்தூரில் சாதாரணமாக சிறிய கடைகள் வைத்திருப்பவர்கள் பலபேர் இருக்கிறார்கள். நிலத்தை அவர்கள் காலி செய்ய வேண்டுமென்றால் மிகவும் அவதிப்படுவார்கள்.

"நிலம் இல்லாதவர்களுக்கு பயிர் செய்வதற்கு நிலம் கொடுக்கிறோம்; மனை இல்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு மனைக் கட்டுகள் கொடுக்கிறோம்—என்று சொல்லிக் கொண்டு, ஏற்கனவே நிலத்தில் இருக்கிறவர்களை அப்புறப்படுத்தக்கூடிய சூழ்நிலைதான் இருந்துகொண்டு வருகிறது. 'நிலச் சீர்திருத்தம் கொண்டு வரப் போகிறோம்; உழுபவர்களுக்கே நிலம் சொந்தம' என்றெல்லாம் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிற நேரத்தில், நிலச் சீர்திருத்தத்தை உடனடியாகக் கொண்டு வந்தால்தான், சர்க்கார் நல்லெண்ணத்தோடு ஏழைகளை கவனிக்கிறார்கள் என்று சொல்ல முடியும். 'நிலச் சீர்திருத்தம் வரப்போகிறது' என்று மந்திரி அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிற பொழுது, பெரிய மிராசுதார்கள் மாநாடுகளைக் கூட்டிப் பயமுறுத்துகிறார்கள். 'தேர்தல் நெருங்குகிறது; நிலச் சீர்திருத்தம் கொண்டுவந்தால் மிராசுதார்கள் தேர்தலில் சர்க்காரை ஆதரிக்கமாட்டார்கள்; ஆகவே, நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தள்ளிப் போடவேண்டும்'—என்ற சூழ்நிலைதான் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இதையெல்லாம் தவிர்த்து, எவருக்கும் பயப்படாமல் நிலச் சீர்திருத்தத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். 'நிலச் சீர்திருத்தம் அமுலுக்கு வந்தால் உற்பத்தி குறையும்' என்று மிராசுதார்கள் பயமுறுத்துகிறார்கள்; ஆனால், கண்டிப்பாக உற்பத்தி இன்னும் அதிகமாகுமே தவிர, குறையவே குறையாது.

"சீனா, காஷ்மீர் போன்ற இடங்களில் இந்தமாதிரி நிலச் சீர்திருத்தம் ஏற்பட்டு வெற்றி காணப்பட்டிருக்கிறது. ஆகையால், இந்த மாநிலத்திலும் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கனம் ரெவினியூ மந்திரி அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்."

மேலும் அவர் கூறியதாவது:—

"உணவுப்பஞ்சம் ஏற்பட்ட காலத்தில், சர்க்கார், புறம்போக்கு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் உழுது பயிரிடுவதற்குக் கொடுத்திருக்கிறார்கள். உற்பத்தியை பெருக்கி உணவு நெருக்கடியைத் தீர்த்த நிலமில்லாத ஏழை தாழ்த்தப்பட்டோரிடமிருந்து, இப்போது நிலத்தை அரசாங்கம் அபகரிக்க நினைக்கிறது — உத்தரவு போடுகிறது; ஏழைகள் பயிரிடுவதற்கு முடியாமல் தவிக்கிறார்கள். இது குறித்து மாவட்ட அதிகாரிகளுக்கு சர்க்கார் ஒரு தாக்கீது அனுப்பி, அந்தப் புறம்போக்கு நிலங்களை மீண்டும் ஏழை விவசாயிகள் பயிரிடுவதற்கு உதவி செய்யவேண்டும. அப்பொழுதுதான் நிலைமை ஒருவாறு மாறும்; உற்பத்தி பெருகும்—அதிகரிக்கும்; உணவு நெருக்கடியும் தீரும். ஆதலால் ஏழைகளுக்கு இந்த அவலநிலை ஏற்படாதவாறு காப்பாற்றுவது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கவேண்டும்.

இதற்கு அத்தாட்சியாக இரண்டொரு விஷயங்களை சொல்ல விரும்புகிறேன். 1942-ம் ஆண்டிலிருந்து விழுப்புரம் வட்டம் கல்பட்டு கிராமத்தில் ஏழைகளுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும 50 ஏக்கர் நிலங்களைக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் நல்ல முறையில் பயிரிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது, அவர்களின் உரிமையைப் போக்கிவிட்டார்கள். அங்கு ஜெயராம் அய்யர், கணக்குப் பிள்ளை போன்றவர்கள் அந்த ஆதித்திராவிட மக்கள் மீது துவேஷம் கொண்டு நிலத்தில் உள்ளவர்களை வெளியேற்றிவிட்டார்கள். தென்னாற்காடு மாவட்ட சட்டசபை உறுப்பினர்கள் பூராவும் கையொப்பமிட்டு சர்க்காருக்கு ஒரு மகஜர் அனுப்பினோம்; இதைப் பற்றி சட்டசபையில் அரை மணி நேரம் விவாதமும நடைபெற்றது. நிலவரி அமைச்சரும அங்கு நிலைமையை பார்வையிட்டார். முதலில், 60 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் மாவட்ட அதிகாரியிடம் கூறினார்; ஆனால் இதுவரை 5 ஏக்கர் நிலம்தான் கொடுத்திருக்கிறார்கள். இது விஷயமாக அமைச்சர் அவர்கள், தென்னாற்காடு மாவட்ட அதிகாரிக்கு ஒரு தாக்கீது அனுப்பி 60 ஏக்கர் நிலங்களையும் அவர்களுக்கு ஒதுக்கும்படியாக உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

படித்து வேலையற்றோர் 2,16,157 பேர்

புதுடில்லி, மார்ச் 8—
1955 டிசம்பர் மாத இறுதியில், இந்தியாவில் உள்ள வேலை தேடித்தரும் நிலையங்களில், படித்த வேலையில்லாதிருந்தவர்கள் மொத்தம் 2,16,157 பேர் பெயர் பதிவாகியிருந்தனர்.

அவர்களில் 1,89,933 பேர் மெட்ரிகுலேஷன் படித்தவர்கள்; 26,224 பேர் பட்டதாரிகள்.

பட்டதாரிகளில் 628 பேர் எஞ்சினீயர்கள்; 179 பேர் டாக்டர்கள்; 25,417 பேர் எஞ்சினீயரிங், வைத்தியக் கல்வி தவிர ஏனைய பாடங்களில் பட்டம் பெற்றவர்கள்.

வேலையில்லாதிருந்த பெண்களின் மொத்த எண்ணிக்கை 10,510; அவர்களில் 9,275 பேர் மெட்ரிகுலேஷன் படித்தவர்கள்; 1,235 பேர் பட்டதாரிகள்.

பரிசீலனை மாதத்தில், வேலை தேடித் தரும் நிலையங்களில் பெயர் பதிவாகியிருந்த படித்த வேலையில்லாதவர்களின் மொத்த எண்ணிக்கை, மாநிலங்கள் வாரியாக வருமாறு:—

உத்திரப் பிரதேசம்: 40,072;
மேற்கு வங்காளம்: 31,046;
பம்பாய்: 28,718;
சென்னை: 25,084.

எவ்வளவு தெரியுமா?

தொழிலாளர்களின் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் நிதிக்கு 1954-55ல் கிடைத்த ரூ. 3,06,42,615ல், ரூ. 21,29,773 மருத்துவ வசதிகளுக்காகவும், ரூ. 17,13,303 நோய்க் கால உதவிக்காகவும், ரூ. 6,925 - தாய்மைக் கால உதவிக்காகவும், ரூ. 7,59,125 ஊனமடைந்தோர் உதவிக்காகவும், ரூ. 1,05,000 - குடும்பத்தார் நன்மைக்காகவும், ரூ. 5,239 இதர வசதிகளுக்காகவும் செலவிடப்பட்டதாம்.

தொழிலதிபர்கள் மொத்தம் ரூ 1,87,89,480 சந்தா செலுத்தியிருக்கிறார்கள்; ஊழியரின் பங்கு ரூ. 97,26,312 மத்திய சர்க்கார் ரூ. 9,29,249 மானியம் அளித்திருக்கிறார்கள்.

'மாதிரி'த் திட்டத்திற்கு ரூ. 17½-இலட்சமாம்!

புதுடில்லி, மார்ச். 7—
ராஜ்யசபையில், 6,000 'அம்பர் சர்க்கா'க்கள் உற்பத்திக்கும் வேலைக்குமான 'மாதிரி'த் திட்டமொன்றை நிறைவேற்றுவதற்கு சர்க்கார் ரூ. 17,59,625 அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று உற்பத்தி உதவி மந்திரி தெரிவித்துள்ளார்.

கோதாவரி நீரில் பெரும் பகுதியை வட நாடு அனுபவிக்கும்!

பம்பாய் அணைக்கட்டுத் திட்ட விவரங்கள்

தென்னாட்டிலேயே மிகப் பெரிய நதி கோதாவரி நதி. அது பம்பாய் மாநிலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் திரிம்பக் என்னும் இடத்துக்கு அருகில் ஆரம்பமாகிறது. அது பம்பாய், ஐதராபாத், ஆந்திரா மாநிலங்கள் வழியாக ஓடி வங்காள குடாக் கடலில் கலக்கிறது. வழியில் அதனுடன் பல உப நதிகள் கலக்கின்றன. ஆந்திராவில் தவளேசுவரம் எனுமிடத்தில்தான் உச்சபட்ச நீரோட்டம் இருக்கிறது; அங்கே விநாடிக்கு 21·7 இலட்சம் கன அடி தண்ணீர் வீதம் பாய்கிறது. நிச்சயமாய் நம்பக்கூடிய நீர்ப்பாய்ச்சல் சுமார் 580 இலட்சம் ஏகரா அடி தண்ணீர் ஆண்டு தோறும் கிடைத்துவரும்.

பம்பாய் மாநிலத்திலுள்ள நதியின் பகுதியைப் பார்த்தால் அது ஒரு சாதாரண ஆறு போன்றே இருக்குமாம். ஆனால், மேற்குத் தொடர்ச்சி மலையில் 200 அங்குல மழை வீதம் பெய்வதால், மலையைத் தாண்டிவரும்போது அது ஒரு மகாநதியாக உருவெடுத்துவிடுகிறதாம்! பருவ மழை பெய்கிற நான்கு மாதங்களிலும் அதில் பெரு வெள்ளம் ஏற்படுவதால், தண்ணீரைச் சேமித்துவைப்பது அவசியமாகிறதாம்! எனவே, இப்போது பம்பாய் மாநிலத்தில் கால்வாய்த் திட்டம் ஆரம்பமாகிறது. அத் திட்டம் மூலம் 31,400 ஏக்கரா நிலத்துக்குப் பாசன வசதி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 1923—24 வாக்கில் 51,450 ஏக்கராவுக்குப் பாசன வசதி கிடைக்கச் செய்யப்பட்டது

ஆனால், இன்னும் அதிக நிலத்துக்குப் பாசன வசதி அளிக்க உத்தேசிக்கப்பட்டது. 1905-ல் அதற்கெனத் திட்டம் வகுக்கப்பட்டது; பின்னர் அது கைவிடப்பட்டது. 1945-ல் தான் அது சம்பந்தமாய்ப் பரிசீலனை ஆரம்பிக்கப்பட்டது. 1948-ல் திட்டம் இறுதியாக உருவாக்கப்பட்டு 1949-ல் வேலை ஆரம்பிக்கப்பட்டது.

திட்ட விவரம்

கங்காப்பூர் திட்டம் கோதாவரியின் மூலஇடத்திலிருந்து 12 மைல் தூரத்துக்கு அப்பால், நாசிக்கிலிருந்து எட்டு மைல் தொலைவில் கட்டப்படுகிறது அதில, 12,500-அடி நீள மண் அணையும், 24 மைல் நீளக் கால்வாயும் இருக்கின்றன. கால்வாய், அணையின் இடபுறம் கிளம்புகிறது இவை தவிர, பழைய கால்வாய்த் திட்டமும் திருத்தியமைக்கப்படுகிறது.

காச்யபி நதி கலக்கும் இடத்திற்குக் கீழே அணை கட்டப்படுகிறது. முன்புள்ள அணை இதற்கு 50 மைல் தூரத்துக்குக் கீழே இருக்கிறது. படுகைக்கு மேலே அணையின் உயரம் 123 அடி. ஆழமான இடத்தில் அதன் உயரம் 145 அடி. தேக்கத்தில் 550 கோடி கன அடி தண்ணீர் சேமித்து வைக்கப்படுகிறது. 133 சதுர மைல் பரப்பில் சேகரமாகிற தண்ணீர் அவ்வாறு சேமிக்கப்படுகிறது. அணையின் 2-வது கட்டத்தில் 720 கோடி கன அடி தண்ணீர் சேமிக்கப்படும். இரண்டாவது கட்டத்தில் 16 2 கோடி கன அடி மண்—கீழ் பவானி அணைக்குச் சமமானது—அந்த அணைக் கட்ட உபயோகிக்கப்படும்.

அணை வேலைக்குத் தொழிலாளர்கள் தட்டுப்பாடாயிருப்பதால், இயந்திரங்களே அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. ஆட்களை உபயோகித்தால், தினசரி 20,000 கன அடி மண் வேலை நடக்கும்; இயந்திர உபயோகம் மூலம், தினசரி 1,20,000 கன அடி மண் வேலை நடக்கும். இதனால் மற்றொரு அனுகூலமும் உண்டு; தொழிலாளர்களுக்காக குடியிருப்பு இடம் அமைக்கும் சிரமமும் குறைகிறது.

நாசிக் இடதுகரைக் கால்வாய் 24 மைல் நீளத்திற்குச் செல்கிறது; நாசிக் மாவட்டத்தில் 25,000 ஏக்கராவுக்கு அது பாசன வழி செய்கிறது; அந்தப் பிரதேசம் இரயில் பாதை வசதி உள்ளனவாகையால், பாசன அபிவிருத்தி துரித வேகத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேக்க நீரில் 250 கோடி கன அடி தண்ணீர் பழைய கால்வாய்த் திட்ட மூலம் பாய்ச்சப்படும். இதற்காக அந்தக் கால்வாய் விரிவாக்கப்படுகிறது.

1949 பிப்ரவரியில் கட்டுமான வேலை துவங்கியது; 1950-ல் இயந்திர சாதனங்கள் வந்து சேர்ந்தன; 1950-ல் நதி திருப்பி விடப்பட்டு, கரைவேலை ஆரம்பிக்கப்பட்டது. 1954 ஜூனின் மாதத்தில் அணை உச்சமாக உயர்ந்து விட்டது. மறுபருவத்தில் மழை நீர் தேக்கத்தில் தேங்கிவிட்டது. 1955 ஜூன் மாதத்தில் அணை முழுக்கப் பூர்த்தியாகிவிட்டது. நாசிக் இடது கரைக்கால்வாய் வேலை நடந்து வருகிறது. இவ்வருடம் ஜூன் மாதம் இது பூர்த்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது

அணையின் முதல் கட்ட வேலைக்கு ரூ 3,98,00,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அணைக்கு மாத்திரம் ரூ. 2,90,00,000 செலவாகியிருக்கிறது; கால்வாய்ச் செலவு ரூ. 76 இலட்சம்; இப்போதுள்ள கால்வாயைத் திருத்தியமைப்பதற்கு ரூ. 31,30,000 பிடிக்கும்.

இரண்டாவது கட்டத்தில், கழிவு தண்ணீர் அணையில் மதகுகள் வைக்கப்படும். தேக்கத்தில் 720 கோடி கன அடி நீர் நிற்கும்படி செய்யப்படும். வலது கரையிலும் ஒரு கால்வாய் அமைக்கப்படும்.

‘ஆசியாவை வெல்லுவதற்கு மேலை நாடுகள் கையாள வேண்டிய ஆயுதம்’

பிரெஞ்சு வெளி விவகார மந்திரி கூறுகிறார்

கராச்சி, மார்ச். 7—

“ஆசியாவில் உபயோகிப்பதற்கு —ஆசியாவை ‘வெல்வதற்கு’ மேற்கத்திய நாடுகள் கையாளக் கூடிய சிறந்த ஆயுதம் பொருளாதார உதவிதான்,”

என்று, ‘சீட்டோ கவுன்சில்’ கூட்டத்தில் எம். கிறிஸ்டியன் பினுய் தெரிவித்திருக்கிறார்.

‘இந்த உதவி, ஏதோ தர்மம் செய்வதுபோலவோ அல்லது ‘சீட்டோ’வில் சேருவதற்கு அளிக்கப்படும் பரிசாகவோ அளிக்கப்படக் கூடாது,’ என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

“நாம் தவறு செய்துவிட்டதாகவும், ‘ஒருசேர வாழ்தல்’ இப்போது தவிர்க்க முடியாததாகிவிட்டதாகவும் கூறவேண்டுமென சோவியத் ‘தலைவர்கள் முயற்சிக்கிறார்கள்” எனவும் பினுய் குறிப்பிட்டதாகக் கூறப்படுகிறது.

கூட்டத்தில் பேசிய அமெரிக்க வெளி விவகார இலாகா மந்திரி டல்லஸ், ‘சோவியத் ரஷ்யாவின் புதிய இராஜரீகக் கொள்கை வெறும் முறை மாற்றம்தான்; எத்தனை நாளைக்கு இந்த ஒருசேர வாழ்தல் என்ற உபசாரம் நீடிக்கும் என்பதை மேற்கத்தி நாடுகள் நம்புவதற்கில்லை’என்றவழக்கம்போலப் பேசியதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தான், பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், சயாம், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் ‘சீட்டோ’வில் அங்கம் வகிப்பது தெரிந்ததே!

இலஞ்ச ஊழல்கள் ஒழிக்க நடவடிக்கை

இலாகாவுக்கு ஒரு அதிகாரி நியமனமாம்

புதுடில்லி, மார்ச். 7—

மத்திய சர்க்காரின் ஒவ்வொரு இலாகாவிலும் இலஞ்சம் போன்ற ஊழல்களை ஒழித்துக் கட்டுவதற் ‘உஷார்’ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனராம். இதற்காக உள்நாட்டு இலாகாவில், ‘நிர்வாக உஷார் பிரிவு’ என்ற பெயரில் ஒரு தனி ‘அமைப்பு’ ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம்.

‘ஆபாச’ புத்தகங்கள் விற்பனைக்குத் தடை

கண்காணிக்க கமிட்டி நியமனம்

புதுடில்லி, மார்ச் 7—

இரயில்வே புத்தக சாலைகளில் ‘ஆபாச’மான புத்தகங்களை விற்பனைக்கு வைத்திருப்பதை இரயில்வே இலாகா தடை செய்துள்ளதென்றும், இந்த உத்திரவு சரியாக அமுல் செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒய்வு பெற்ற கல்வியாளர்களைக் கொண்ட கமிட்டிகளை ஒவ்வொரு இரயில் வேக்கும் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய வானொலி தற்போது நாள்தோறும் 27 இந்திய மொழிகளிலும், அந்நிய மொழிகளிலும் மொத்தம் 71 செய்தி அறிக்கைகளை ஒலிபரப்பி வருகிறது. அவற்றில் 28 அறிக்கைகள் வெளிநாடுகளுக்கான ஒலிபரப்புகளிலும் 43 அறிக்கைகள் உள்நாட்டு ஒலிபரப்புகளிலும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

ஏழை மாணவர்களுக்கு நகரசபை உதவி

பார்வைக் கோளாறு உள்ள ஏழை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்கித் தருவதற்காக ஐதராபாத் நகரசபை ரூ. 1,000 அனுமதித்துள்ளதாம்.

முடமான பிச்சைக்காரர்களுக்கு விடுதி ஒன்று நிறுவி, அங்கு அவர்களுக்கு ஏதாவதொரு தொழிலைக் கற்றுத்தரவும் ஏற்பாடு செய்துள்ளதாம்.

நகரசபைகள் நிர்வாக முறை மாற்றம்

சென்னை, மார்ச் 7—

“நகரசபை போன்ற உள்ளூர் நிர்வாகத்தைத் திருத்தி அமைப்பதற்கான இரத்தினசபாபதி (முதலியார்) குழுவின் சிபாரிசுகளின் மீது சர்க்கார் எடுத்துள்ள முடிவுகளை விளக்கி வெள்ளை அறிக்கை ஒன்று சீக்கிரமே சட்டசபையில் தாக்கல் செய்யப்படும்” என்று, தொடர்புடைய இலாகா மந்திரி சென்னை சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

பஞ்சாயத்து நிர்வாகத்தில், கால மாற்றத்திற்கு ஒப்ப கடுமையான சில மாற்றங்களை அமுலாக்கும் விஷயம் சர்க்காரின் தீவிரமான பரிசீலனையிலிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சிவில் வேலைகளுக்காக ரூ. 45,94 100 மானியக் கோரிக்கையை சபையில் எழுப்பும்போது தான் மந்திரி இந்தத் தகவல்களைத் தந்திருக்கிறார்.

கிராமத் தொழிலுக்குத் தனி இலாகாவாம்!

திட்டக் குழு பரிசீலிக்கிறதாம்

புதுடில்லி, மார்ச். 7—

கிராமத் தொழில்களுக்காக ஒரு தனி இலாகாவை ஏற்படுத்துவது, திட்டக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறதாம்! துணி உற்பத்திக்கு வரம்பு கட்டுவதும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதாம்.

ராஜ்யங்கள் சபையில் இது பற்றித் தெரிவித்த துணைத் திட்ட அமைச்சர், கார்வே குழுவின் அறிக்கையின் அடிப்படைக் கொள்கையைத் திட்ட குழு ஏற்றிருப்பதாகவும், சிபாரிசுகள பற்றி முடிவு ஏதும் செய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

சோஷலிஸ்டு உறுப்பினர் வெளி நடப்பு

உ. பி. சட்டசபையில் நிகழ்ச்சி

உத்தர. பிரதேச சட்டசபையில், சோஷலிஸ்டு உறுப்பினர்கள், சட்டசபைக் கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டிருக்கின்றனர்.

பாராபங்கியில் சில காலத்திற்கு முன்பு ஒரு சோஷலிஸ்டு ஊழியர் கொலை செய்யப்பட்டதைச் சேர்த்து அங்கு நான்கு கொலைகள் நடைபெற்று விட்டதாகவும், அதனால் அங்கு சட்டம், அமைதி நிலைகள் பாதிக்கப் பட்டிருக்கின்றன என்[illegible], எனவே, அது குறித்து சட்[illegible]சபை விவாதிக்கவேண்டுமெனவும் ஒரு சோஷலிஸ்டு உறுப்பினர் கோரினர். சபைத்தலைவர் அனுமதி மறுத்துவிடவே உறுப்பினர் மூவர் வெளியேறியிருக்கின்றனர்.

பாராபங்கியில் சோஷலிஸ்டு ஊழியரைக் கொன்றவர்கள் முன்னாள் ஜமீன்தார்கள் என்றும் அவர்கள் சோஷலிஸ்டுகளிடம் பஞ்சாயத்துபோர்டு தேர்தலில் தோற்றுப் போனமையால், வஞ்சம் தீர்த்துக்கொள்ள சதிசெய்தே சோஷலிஸ்டு ஊழியரைக் கொன்றனர் என்றும் கூறப்பட்டது.

நேருவுக்கு சாப்பாடு

ஏற்பாடுகளைக்கவனிக்காத அதிகாரி மீது நடவடிக்கை

1954-ம் ஆண்டில் பிரதமர் நேரு சம்பல் அணைக்கட்டுக்கு வருகை தந்தபோது அவருக்கு வேண்டிய சாப்பாடு முதலிய ஏற்பாடுகளைக் கவனிக்க நியமிக்கப்பட்டிருந்த அதிகாரி, ஏற்பாடுகளைச் சரிவரக் கவனியாமல், குடி போதையில் உலகத்தை மறந்துவிட்டிருந்த குற்றத்திற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மத்திய பாரத் சட்டசபையில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் மந்திரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பீடித் தொழிலாளர்கள் நிலைமை பற்றி விசாரணை

சர்க்கார் அசிரத்தை?

சென்னை, மார்ச் 7—

“பீடித் தொழில், தொழிலாளர்கள் நிலைமை பற்றி விசாரிக்க எந்தக் குழுவையும் சர்க்கார் ஏற்படுத்தவில்லை,”

என்று, சட்டசபையில் தொழில் அமைச்சர் பக்தவத்சலம் கூறியுள்ளார்.

“மது விலக்கைத் தடை செய்ததுபோல் பீடி, சுருட்டுகளைத் தடை செய்ய சர்க்காருக்கு உத்தேசமுண்டா,” என்று கேட்கப்பட்டபோது, ‘அவ்வாறு உத்தேசமில்லை’ என்று அமைச்சர் பதிலளித்துள்ளார்.

‘சவ மொழி’யின் எதிர்காலம்

விசாரிக்கக் குழு நியமனம்?

சமஸ்கிருதக் கல்வியின் எதிர்காலம்பற்றி விசாரிப்பதற்கு விரைவிலேயே குழு ஒன்றை நிறுவுதற்கு இந்திய அரசியலார் ஆலோசித்து வருகின்றனரென்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய சர்க்கார், 1951-ல், மொத்தம் ரூ. 27,000 பெறுமான முள்ள கதர் துணியை வாங்கினர்; 1955-ல் சர்க்கார் வாங்கிய கதர் துணியின் மொத்த மதிப்பு ரூ 87 இலட்சம்.

புயல் நிவாரண நிதி

தமிழகப் புயல், வெள்ளச்சேத நிவாரண நிதிக்கென திருச்சி மேலப்புதூர் தி. மு கழகப் படிப்பகத்தார், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அங்கு சென்றிருந்தபோது, ரூ. 41—10—6 அவரிடம் தந்தனர்—நிதித் தொகை வரப்பெற்றோம்.

—தி. மு. க. தலைமை நிலையம்

****

தலைமைக் கழகம்: அறிக்கை—5/56

உறுப்பினர் சேர்த்தல்

★

பொது வேலைநிறுத்தம் பற்றிய பணிகளில் கழகத் தோழர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டி நேர்ந்ததாலும், உறுப்பினர் சேர்க்கும் காலம் மேலும் சிறிதளவு நீடிக்க வேண்டும் என்று பல கிளைகள் விரும்பும் காரணத்தாலும் உறுப்பினர் சேர்க்கும் காலம் **18—3—56** வரையில் மட்டுமே நீடிக்கப்படுகிறது.

மார்ச்சுத் திங்கள் 12-ஆம் நாளிலிருந்து 18-ஆம் நாள் வரையில் உள்ள ஒரு வாரத்தை உறுப்பினர் சேர்க்கும் வாரமாகக்கொண்டு தகுதியுள்ள மிகவான உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபடும்படி கிளைக் கழகங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறோம்.

18—3—56-ஆம் நாளை உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகக்கொண்டு, 31-3-56-க்குள் உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்களைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கிளைக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர்க்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும், கிளைக் கழகம்—மாவட்டக் கழகம் ஆகியவற்றிற்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும் மார்ச் 15-ஆம் நாளுக்குமேல் தொடர்ந்து தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பெறும்.

அறிவகம்
29—2—56
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

எந்த மாநிலத்தில் நிறுவப்படும்?

2-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 35 சர்க்கரை ஆலைகள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திசி, புதிதாக மொத்தம் 35 சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தப்படுமாம்!

மக்கள் சபையில் இதை அறிவித்த உணவு—விவசாய அமைச்சர் 1-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் புதிதாக லைசென்சுகள் வழங்கப்பட்ட 35 சர்க்கரை ஆலைகளின் நிர்மாண வேலையும் அதே காலத்தில் பூர்த்தி செய்யப்படுமெனக் குறிப்பிட்டார்.

நாற்காலி வண்டி!

டில்லிக்கும் — அமிர்தசரசிற்கும் இடையில் ஓடும் மெயில் இரயில் வண்டியில், நாற்காலிகள் அமைந்த முதல் வகுப்புப் பெட்டி இணைக்கப் பட்டிருப்பதாயும், குறைந்த தூரம் பிரயாணம் செய்பவர்களுக்கு இது வசதியாயிருக்குமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

வடக்குப் பிராந்திய இரயில்வேயில் உபயோகிக்கப்படும் இந்தப் பெட்டிகள் பம்பாய் இரயில்வேத் தொழிற்சாலையில் தயாரானவையாம்!

மார்ச்-10: மாபெருங் கூட்டம்

தி. மு. க. திடலில் சிறப்பான அமைப்புகள்

அர்த்தாலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள நிலையைக் குறித்து சர்வகட்சிக் கூட்டணியில் சேர்ந்துள்ள கட்சிகள் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறிவருவதற்கேற்ப திராவிட முன்னேற்றக் கழகமும் 10—3—56 சனி மாலை மாபெருங்கூட்டத்தின் வாயிலாகத் தமிழக மக்களுக்கு அர்த்தாலுக்குப் பிறகு கழக நிலையை விளக்குவதற்கு சிறந்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இக்கூட்டம் நுங்கம்பாக்கம் இரயில்வே நிலையத்திற்கருகில் ஹாரிங்டன் ரோடிலுள்ள தி. மு. கழகத்திற்குச் சொந்தமான திடலில் நடைபெறுகிறது. இத்திடலில் முதன்முதலாக நடைபெறும் நிகழ்ச்சியும் இதுதான்.

எனவே, கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தி.மு. கழகத்தலைமை நிலையமே மேற்கொண்டிருக்கிறது.

திடலைச் சுற்றி ஏராளமான கழகக் கொடிகள் வானளாவப் பறந்து, 'வாரீர், வாரீர்' என்று தமிழக மக்களை வரவேற்பதைப்போல காட்சியளிக்கின்றன. பந்தல்-மேடை அமைப்புகளும் புத்தம் புதியதாகும்.

தாய்மார்களுக்குத் தனி இடம் அமைக்கப்பட்டிருக்கிறது. சொற்பொழிவாளர்கள் பேசுவதற்கும் பிரத்தியேக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இக்கூட்டத்திற்கு அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் உள்ளிட்ட சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்கின்றனர்.

இசைச் செல்வி கஸ்தூரி — குடந்தை - சீனிவாசன் ஆகியோர் இன்னிசை வழங்குவர். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சென்னைத் தோழர்கள் உடனிருந்து சிறப்புறச் செய்துவருகின்றனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அர்த்தாலுக்குப் பிறகு!

10—3—56 சனி மாலை 5-மணிக்கு

நுங்கம்பாக்கம்

இரயிலடிக்கு அருகிலுள்ள

தி. மு. க. திடலில்

(ஹாரிங்டன் ரோடு அருகில்)

★

பேசுவோர்:

அண்ணா

நெடுஞ்செழியன்

நடராசன்

மதியழகன்

கருணாநிதி

கண்ணதாசன்

கல்யாணசுந்தரம்

ஏ. கோவிந்தசாமி

சி. பி. சிற்றரசு

கே. ஆர். இராமசாமி

எம். ஜி. இராமச்சந்திரன்

சத்தியவாணிமுத்து

அலமேலு - அப்பாதுரை

★

இன்னிசை:

இசைச்செல்வி ஜி. கஸ்தூரி — குடந்தை சீனிவாசன்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

பஸ் வழி: 10, 24, 27

டில்லியின் திட்டம் கவலை தருகிறது

முடிவு காண இயலாது குழப்பமாயிருக்கிறது

பஞ்சாப் மாநில அமைப்பு குறித்து தாரா சிங்

"பஞ்சாப் மாநில அமைப்பு குறித்து டில்லியின் திட்டங்கள் எனக்கு மிகுந்த கவலையைத் தருகின்றன. சமீபத்திய கூட்டத்தில் கூறப்பட்ட திட்டங்கள் குறித்து நான் இன்னும் முடிவெடுக்கவில்லை; நான் குழப்பமடைந்திருக்கிறேன்; ஒரு முடிவு மேற்கொள்ள முடியாதபடி என் மனம் அலைபாய்ந்து கிடக்கிறது.

"சர்க்காரின் திட்டங்கள் வரும் மார்ச் 11-ந் தேதியன்று கூடும் அகாலி தள பொதுக் குழுவில் விவாதிக்கப்படும்; அதன் பிறகே நான் பஞ்சாப் மாநில அமைப்பு குறித்து முடிவு கூறமுடியும்.

"எனது கருத்தை அகாலி தள பொதுக்குழு உறுப்பினர்கள் மீது திணிக்க நான் விரும்பவில்லை. அவர்கள் சுதந்திரமாக முடிவு செய்வார்கள்"

என்று, அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாரா சிங் தெரிவித்திருக்கிறார்.

குமாஸ்தாக்கள் சம்பள விகிதம்

மாற்றி அமைக்க சர்க்கார் முடிவு செய்யவில்லையாம்!

ஏராளமாகப் பணம் செலவாகக் கூடுமென அமைச்சர் அச்சம்?

புதுடில்லி, மார்ச் 7—

மக்கள் சபையில், கேள்வி நேரத்தின்போது, 'கீழ்த்தர சர்க்கார் குமாஸ்தாக்களின் சம்பள விகிதங்களை மாற்றி அமைப்பதைக் குறித்துச் சர்க்கார் ஏதாவது முடிவுக்கு வந்திருக்கிறதா?' என்று கேட்டபோது, 'அப்படி ஒன்றும் இல்லை' என்று கூறிய உள் விவகாரமந்திரி மேலும் குறிப்பிடுகையில், பொருளாதார நிலைமையே இதற்குக் காரணமென்றும், சம்பள விகிதங்களை மாற்றி அமைப்பதானால், ஒரு இலட்சம் ரூபாய் மட்டும் செலவாகாது—ரூ. 1 கோடியோ அல்லது அதற்கு மேலாகவோ செலவாகுமெனவும் கூறினார்.

எவ்வளவு தாராளம்!

தென்னாட்டில் 75 ஆலைகளுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டதாம்!

புதுடில்லி, மார்ச் 9—

"தென்னாட்டில் 1955-ம் ஆண்டில் புதிதாக இரண்டு நூல் ஆலைகள் முழு வேகத்தில் உற்பத்தி துவக்கின; அவைகளில் ஒன்று மதுரையிலும் (10,000 - கதிர்கள்), மற்றொன்று தார்வாரிலும் (6,000 கதிர்கள்) இருக்கின்றன. தென்னாட்டில் 32 - நூல் ஆலைகள் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றன; சமீபத்தில் ஏற்படுத்தப்படவிருக்கும் 65 - ஆலைகளுக்கு ஏற்கெனவே லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன,"

என்று, ராஜ்யங்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மந்திரி தெரிவித்தார்.

வெளிநாட்டுமாணவர்களுக்கு செலவழித்த தொகை

மத்திய நிதி அமைச்சர் தகவல்

புதுடில்லி, மார்ச் 9—

'கொழும்புத் திட்டத்தின் தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஏற்பாட்டின் கீழ், இந்தியாவில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில், நேபாளத்தைச் சேர்ந்த 36 மாணவர்களும், மலேயாவைச் சேர்ந்த 2 மாணவர்களும் மருத்துவக் கல்வியும், பயிற்சியும் பெற்று வருகின்றனர்; அவர்களுக்காக இந்திய சர்க்கார் 1955-56-ம் ஆண்டில் மொத்தம் ரூ 1,40,000 செலவழித்துள்ளனர்" என்றும், மத்திய நிதி மந்திரி ராஜ்யங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

திருமணம்

12—3—56 காலை 9 மணிக்கு, திருப்பரங்குன்றம் நகர விடுதி'யில், எம். ஜி. ஆர். நாடக மன்றத் தோழர் ஆர். எம். வீரப்பன் —தோழியர் இராஜம்மாள் திருமணம் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், கே. ஆர். இராமசாமி, என். எஸ். நாராயணன் டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். இராசேந்திரன், ஏ. கே. வேலன், டி. கே. சீனிவாசன், எஸ். முத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

சென்னை—4-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு

11—3—56 மாலை 4 மணிக்கு கழகப் பணிமனையில் நிர்வாக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். கூட்ட வரவு-செலவு, கழக ஆக்க வேலைகள் பற்றி ஆராயப்படும்.

புதுவை—கோவிந்தசாலை தி. மு. க. தோழர்கட்கு

11—3—56 காலை 8 மணியளவில், கழக இல்லத்தில், தோழர் வி. செல்வர்க்கரசு தலைமையில். பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது ஆக்கவேலைகள் பலகுறித்து முடிவு மேற்கொள்ளப்படும்.

அச்சிடப்பட்ட ரூபாய் நோட்டுகள் மதிப்பு

நாசிக் ரோடிலுள்ள நாணயப் பத்திரங்கள் அச்சகத்தில் 1955-ம் ஆண்டில் மொத்தம் ரூ 833,48,29,240-க்கு பல்வேறு மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளும் பாங்கு நோட்டுகளும் அச்சிடப்பட்டன என்றும், குறிப்பிட்ட காலத்தில் அயல் நாடுகளுக்காக அச்சிடப்பட்ட ரூபாய் நோட்டுகளின் மொத்த மதிப்பு ரூ. 4 கோடிதான் என்றும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூ. 24,28,00,000 நிதி உதவியாம்

புதுடில்லி, மார்ச் 9—

1,20,000 டன் நிறையுள்ள பல கப்பல்கள், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள கப்பல் கட்டும் துறைகளில் கட்டப்பட்டு வருகின்றன என்றும், கப்பல்களை வாங்குவதற்காக இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கம்பெனிகளுக்கு இதுவரை சுமார் ரூ. 24,28,00,000 நிதி உதவியாக அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டம்

எட்டயபுரம்:

11—3—56 மாலை 4 மணிக்கு

தலைவர்:
அருணகிரி

பேசுவோர்:
எம். ஜி. இராமச்சந்திரன்
எஸ். சலிங்கன்

★

குனியமுத்தூர்:

மாரியம்மன்கோயில் திடல்
11-3-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர்:
தங்கமாணிக்கம்

பேசுவோர்:
தில்லை-வில்லாளன்
கே. ஏ. மதியழகன்

★

புதுவை-முதலியார்பேட்டை:

வானொலி திடலில்
11—3—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:
என். வி. நடராசன்
ச. சிவப்பிரகாசம்

குறிப்பு: அன்று காலை 9 மணியளவில், புதுவை — முதலியார்பேட்டை தி. மு. கழக ஆண்டு விழா, கழக இல்லத்தில் நடைபெறும்.

★

சங்கரநயினார்கோவில்:

12—3—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
டி. ஆர். சுப்பிரமணியம்

பேசுவோர்:
எம். ஜி. இராமச்சந்திரன்
சி. எஸ். பழனியப்பன்

திருவப்பூர் தமிழ் மன்ற உறுப்பினர்களுக்கு

11—3—56 காலை 10-30 மணியளவில், மன்றத்தின் பொதுக்குழு, தோழர் வி. சண்முகம் இல்லத்தில் நடைபெறும். அதுபோது, புதிய உறுப்பினர் தேர்ந்தெடுப்பு நடைபெறும்.

சென்னையில் இன்றைய நிகழ்ச்சிகள்

எஸ். ஆர். யூ. பொதுக் கூட்டம்:—மாலை 6 மணியளவில், பெரம்பூர் ஏரி மைதானத்தில், தோழர் டி. முருகவேள் தலைமையில் தோழர்கள் எல். இராகவானந்தம், ஜி பராங்குசம் பேசுவர்.

* * *

அ. இ. பெட்ரோலியம் தொழிலாளர் சம்மேளனம்:—இரண்டாவது பிரதிநிதிகள் மாநாட்டையொட்டி, மாலை 6 மணியளவில் செயிண்ட்மேரீஸ் ஆலில், தொழிலாளரின் மாபெரும் கூட்டம் நடைபெறும். 1955-ம் ஆண்டு 'போனஸ்' பற்றி முடிவு செய்யப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

11—3—56 காலை 10 மணிக்கு, சென்னை—பிராட்வே, 4/88 எ. எண்ணுள்ள 11-வது வட்ட தி. மு. கழக பணிமனையில், தோழர் கா. வி இராதாகிருட்டிணன் தலைமையில், சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். 'சமுதாயம்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

பகுத்தறிவு கலா நிகழ்ச்சி

11—3—56 மாலை 5 மணிக்கு கடம்பத்தூர் தி. மு. க. சார்பில் தோழர் கா. கோவிந்தராசன் தலைமையில், தோழர் கரிகாலன்—தோழியர் டி. கே. ராணி ஆகியவர்களால் பகுத்தறிவு கலா நிகழ்ச்சி நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.